**8010**

Register Number | | | | | |

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

## Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

*குறிப்பு* : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக : $3 \times 4 = 12$

1. இசைத்தமிழ் குறித்தும், முற்காலத்தும் இக்காலத்தும் விளங்கும் இசைத்தமிழ் நூல்வகைகள் குறித்தும் பரிதிமாற் கலைஞர் உரைப்பன யாவை ?

2. உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு.வி.க. கூறுவன யாவை ?

3. நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை என்று திரு.வி.க. உரைப்பனவற்றை எழுதுக.

4. கவிதை என்பது யாது என்ற வினாவிற்கு 'வோர்ட்ஸ்வொர்த்', 'கோலரிட்ஜ்' ஆகியோர் கூறும் விளக்கங்களாகப் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை கூறுவன யாவை ?

5. நம் முன்னோர்கள் நனிநாகரிகராய் விளங்கிய பான்மையை இளவழகனார் எவ்வாறு விளக்கியுள்ளார் ?

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை தருக : $3 \times 4 = 12$

6. விறலுடைய இளைஞர்க்கும் மாடு உவமையாகக் கூறப்பட்டதனைத் தேவநேயப் பாவாணர் எங்ஙனம் விளக்கியுள்ளார் ?

7. செல்வம் நிலைபேறு உடையதன்று - என்பதை நாலடியார் எங்ஙனம் நயம்பட நவில்வதாக டாக்டர் அ. சிதம்பரநாதன் விளக்கியுள்ளார் ?

8. முன்னேற்றம் என்பது பற்றி மு.வ. உரைப்பன யாவை ?

9. ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு.வ. காட்டும் வழிகள் யாவை ?

10. கற்களை அடுக்கி அமைக்கப்பட்டுள்ள கோவில்கள் பற்றித் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் கூறும் செய்திகளை எழுதுக.

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக : $1 \times 6 = 6$

11. 'தமிழ் உயர்தனிச் செம்மொழி' - இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து எழுதுக.

12. கோ-கோவன்-என்னும் சொற்களைப் பற்றிய பாவாணர் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களின் மிகாமல் விடை எழுதுக : $2 \times 10 = 20$

13. *'பால்வண்ணம் பிள்ளை'* அல்லது *'மண்'* என்ற சிறுகதையைக் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

*அல்லது*

*'மகன்'* அல்லது *'பழிக்குப் பழி'* என்னும் கதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. *'கிழிசல்'* அல்லது *'சட்டை'* என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

*அல்லது*

*'வேலி'* - என்னும் சிறுகதையில் மருமகள் மாலதியை, மாமியார் கோமதி மகளைப் போல் போற்றியதாகக் கற்பனைக் கதை ஒன்று வரைக.

*அல்லது*

பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து தவறிய *'மகன்'* மனம் மாறி புதிய வாழ்வைத் தொடங்கியதாகக் கற்பனைக் கதை ஒன்றை வரைக.

[ Turn over

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அவற்றுள் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, கற்பனை, சந்தம், சுவை, உவமை, உருவகம் ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1 × 10 = 10

'மீனினம் ஓடிப் பரக்குதம்மா, ஊடே
வெள்ளி ஓட மொன்று செல்லுதம்மா !

வானும் கடலாக மாறுதம்மா ! - இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா !

முல்லை மலர்ப்பந்தல் இட்டனரோ ? - தேவர்
முத்து விதானம் அமைத்தனரோ ?

வெல்லு மதியின் திருமணமோ ? - அவன்
விண்ணில் விழாவரும் வேளையிதோ ?

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா ! - அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா !

இம்ப ருலகின் இயல்பிதம்மா ! - மதிக்கு
இன்னார் இனியாரும் உண்டோ ? அம்மா !

மாற்றம் உலகின் இயற்கையென - இங்கு
மாந்தரும் கண்டு தெளிந்திடவோ,

போற்றும் இறைவனின் மாமதியம் - விண்ணில்
பூத்து நிலவ விதித்தனனே'

– கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

VI. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. 3 × 2 = 6

16. Health is wealth.

17. Make hay while the sun shines.

18. No pain no gain.

19. Computer is one of the modern wonders of electronics.

20. Every young man should think twice before taking to politics.

21. Education should develop and promote good values.

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக. 1 × 4 = 4

அ) ''பழகப் பழகப் பாலும் புளிக்கும்''

ஆ) ''நுணலும் தன் வாயால் கெடும்''

இ) ''ஆபத்திற்குப் பாவமில்லை''

அல்லது

*'அருவி'* அல்லது *'வாய்மை'* என்னும் தலைப்பில் சிந்தித்து, உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை 8 அடிகளுக்குக் குறையாமலும் 10 அடிகளுக்கு மிகாமலும் எழுதுக.

அல்லது

[ Turn over

*குறிப்பு :* காது கேளாத மாணவர்களுக்கு மட்டும்

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்கு பதிலளிக்க பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் ***ஐந்தனுக்கு*** மட்டும் விடை எழுதவும். $5 \times 2 = 10$

இன்றைய பட்டதாரிகளிடம் அறிவுத் தாகம் குறைந்துவரும் அவலநிலை உள்ளது. இவர்கள் படிக்கும் போதே பாட நூல்களை ஓரங்கட்டி குறிப்பேடுகளைத் தவறாமல் வாங்கிப் படித்தவர்கள். இதனால் மூல நூல்கள் தூசி படிந்து கிடக்கின்றன. தங்கள் துறைகளைச் சார்ந்த நூல்களையாவது படிக்க வேண்டும். தரக்குறைவான இதழ்களைப் படிப்பதை ஒதுக்க வேண்டும். சுயநலத்திலும், திரைப்படம் தொலைக்காட்சி ஆகிய கவர்ச்சிகளில் நம்மை இழந்துவிடக்கூடாது.

இந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஒரு வியட்நாம் கவிஞன் அடிமையானது பற்றி எழுதுகின்றான். பிரெஞ்சுக்காரரின் ஆயுதங்கள் எங்களை அடிமைப்படுத்தின. ஆனால் அவர்களின் நாட்டு நூல்கள் எங்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தன என்பது அக்கவிஞனது கூற்று. டால்ஸ்டாய் தம் 15 வது வயதில் ஒருநாள் நூலகத்தில் ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் என்ற நூலைப் படித்தார். அன்று முதல் ரூசோவின் உருவம் தாங்கிய பதக்கத்தைப் பெருமையுடன் தமது கழுத்தில் அணிந்து கொண்டார். ஆகையால் பட்டதாரிகள் ஓய்வு நேரங்களில் நூலகம் நோக்கிச் செல்ல வேண்டும்.

*வினாக்கள் :*

16. இன்றைய பட்டதாரிகளிடம் குறைந்து வருவது எது ?

17. தூசி படிந்து கிடப்பவை யாவை ?

18. ஒதுக்க வேண்டியது எது ?

19. வியட்நாம் கவிஞன் எழுதியது என்ன ?

20. சமுதாய ஒப்பந்தம் என்ற நூலை எழுதியவர் யார் ?

21. ரூசோவின் உருவம் தாங்கிய பதக்கத்தை பெருமையுடன் அணிந்து கொண்டவர் யார் ?

22. பட்டதாரிகள் ஓய்வு நேரங்களில் என்ன செய்ய வேண்டும் ?

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. $10 \times 1 = 10$

23. எனக்குப் பலவீடுகள் உள்ளது.

( வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. இந்த ஓவியத்தில் அமைந்த வண்ண செறிவும், ஓவிய பொலிவும் நம்மைக் கவர்கின்றன.

( தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக )

25. பித்தர் சொன்னவும் பேதையர்ச் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ என்றார்க் கம்பர்.

( தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கி எழுதுக )

26. ஒலி, ஒளி அல்லது ஊண், ஊன்

( பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக )

[ Turn over

27. ''டி.வி.யில் சீரியல் பார்க்காவிட்டால் லைஃபே போர் அடித்துவிடும்'' என்கிறாள் பாட்டி.

( ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக )

28. 'நமஸ்காரம்' என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை ஆசீர்வதித்தேன்.

( பிறமொழிச் சொற்கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக)

29. கோளிமுட்டை தாவாரத்தில் உருண்டது.

( கொச்சையான வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக)

30. காகம் கூவும். நாய் கத்தும்.

( மரபு வழுவை நீக்கி எழுதுக)

31. ஏறிகளில் மலைநீர் சேமித்தாள் கிணருகளில் நீர் வற்றாது.

( எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக)

32. உலகம் நாடாகவாவது இருக்கட்டும் காடாகவாவது இருக்கட்டும் எங்கே நல்லவர்களிருக்கின்றார்களோ அங்கே அதுவும் நல்லதாக இருக்கும்.

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக)